**பெருநகர சென்னை மாநகராட்சி**

**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண்.44** **நாள்: 14.04.2024**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, வாக்களார்கள் 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில், சென்னை மாவட்டத்தில் 3 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை மாவட்டத்தில் 100% வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி, தேர்தல் குறித்த வினா விடை போட்டி நடத்தப்பட்டு வெற்றி பெறுபவர்கள், குடியிருப்பு நலச் சங்கங்களுக்கு போட்டி நடத்தப்பட்டு வெற்றி பெற்ற குடியிருப்பு நலச் சங்கங்களுடன் "தலைமை தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் ஆகியோருடன் காபி" நிகழ்ச்சியும், (Coffee with CEO & DEO) வாக்களியுங்கள், செல்பியை வெளியிடுங்கள் மற்றும் சமூக வலைதளத்தில் உள்ள செயற்பாட்டாளர்களுக்கு (Social Media influencers) சமூக வலைதளத்தில் விழிப்புணர்வுப் போட்டி போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

**1) CEO & DEO உடன் காபி (Coffee with CEO & DEO)-தேர்தல் குறித்த வினா விடை போட்டி**

சென்னை முழுவதும் உள்ள அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் கியூ ஆர் குறியீடு (QR code) கொண்ட ஒரு போஸ்டர் வைக்கப்படும். இதில் சென்னைவாசிகள் அனைவரும் பங்கேற்று வெல்ல 10 வினாடி வினா கேள்விகள் இருக்கும். பங்கேற்கும் அனைவருக்கும் இணையவழி சான்றிதழ்கள் வழங்கப்படும், மேலும் வெற்றி பெறுபவர்கள் பின்னர் சிறப்பாக கௌரவிக்கப்படுவார்கள். ஆன்லைன் வினாடி வினா பதில்களை சமர்ப்பித்த பின்னர், அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் சான்றிதழ்கள் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும். எல்லா கேள்விகளுக்கும் சரியாக பதிலளித்த வெற்றியாளர்களுக்கான சான்றிதழ்களில் வெற்றியாளர்கள் என்று குறிக்கப்படும். அனைத்து கேள்விகளுக்கும் சரியாக பதிலளித்தவர்களுக்கு மட்டுமே மின்னஞ்சல் செய்யப்படும்.

இந்தப் போட்டியில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலிருந்தும் இரண்டு நபர்கள் வீதம், மொத்தம் 32 நபர்கள் "CEO & DEO உடன் காபி" நிகழ்ச்சிக்காக தேர்வு செய்யப்படுவார்கள்.

2) குடியிருப்பு நலச் சங்கங்களுக்கு போட்டி

தேர்தல் விழிப்புணர்வு போட்டியில் அனைத்து குடியிருப்பு நலச் சங்கங்களும் முன்பதிவின்றி போட்டியில் பங்கேற்கலாம். குடியிருப்பு நலச் சங்கத் தலைவர்கள் தங்கள் சங்கத்தின் கீழ் வரும் வீடுகள் / அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிக்கும் நபர்களின் குறைந்தபட்சன் 90% வாக்குப்பதிவை உறுதி செய்ய வேண்டும். நூறு சதவிகிதம் வாக்குப்பதிவு உறுதி செய்யும் அடுக்குமாடி குடியிருப்பு சங்கத்தினர் பாராட்டப்படுவார்கள் இதற்காக பெருநகர சென்னை மாநகராட்சி சமூக வலைத்தளங்களில் படிவம் ஒன்று வெளியிடப்படும். அந்த படிவத்தில் சங்கத்தின் பெயர், இடம், தொடர்பு எண், சங்கத்தின் கீழ் உள்ள நபர்களின் எண்ணிக்கை, வாக்களித்த வாக்காளர்களின் EPIC எண்கள் ஆகியவற்றை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

தங்கள் சங்கத்தில் உள்ள நபர்களின் 90% வாக்குப்பதிவை வெளிப்படுத்தும் ஒவ்வொரு மண்டலத்திலிருந்தும் 10 குடியிருப்பு நலச் சங்கங்கள், தலைமைத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலருடன் காபி சந்திப்பிற்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள். போட்டியில் பங்கேற்ற அனைத்து சங்கங்களுக்கும் படிவம் சமர்ப்பித்த பின்னர் மின்னஞ்சல் மூலம் மின்னணு சான்றிதழ் வழங்கப்படும்.

3) வாக்களியுங்கள், செல்ஃபியை வெளியிடுங்கள்: சமூக ஊடக ஈடுபாடு மூலம் வாக்குப்பதிவை ஊக்குவித்தல்

செல்ஃபி பூத்கள் (Selfie Points) பிரபல இடங்களில் அமைக்கப்படும். அந்த இடங்களின் விவரங்கள் சமூக ஊடகங்களில் பட்டியலிடப்படும். வாக்குப்பதிவு நாளிலும், அதற்கடுத்த இரண்டு நாட்களிலும், வாக்களித்தவர்கள் இந்த செல்ஃபி இடங்களுக்குச் சென்று, தங்கள் விரலில் உள்ள மையை (ink) காட்டி புகைப்படம் எடுத்து, சமூக ஊடக பக்கங்களில் பகிர்ந்து கொள்ளலாம். பதிவுகளில் சென்னை மாநகராட்சி (@chennaicorp)ஐ குறிப்பிட்டு Tag செய்து, Mention செய்த பங்கேற்பாளர்களுக்கு Direct Message மூலம் ஒரு படிவ இணைப்பு அனுப்பப்படும். படிவத்தில் பெயர் மற்றும் இடம் பற்றிய விவரங்களை பூர்த்தி செய்யும் பங்கேற்பாளர்களுக்கு மின்னஞ்சல் மூலம் சான்றிதழ்கள் அனுப்பப்படும். மேலும், சமூக ஊடகங்களில் அதிக ஈடுபாடு கொண்ட 20 பங்கேற்பாளர்கள் தேர்தலுக்குப் பின்னர் பாராட்டுக் கேடயம் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்படுவார்கள்.

**4) சமூக வளைதல செயற்பாட்டாளர்களுக்கு (Social Media Influencers) களுக்கு சமூக வளைத்ததில் தேர்தல் விழிப்புணர்வுப் போட்டி**

தேர்தல் குறித்து சமூக வலைத்தளங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் சென்னை வாசிகளுக்கு விருது வழங்கப்படும். பங்கேற்பாளர்கள் வாக்குப்பதிவு குறித்த விழிப்புணர்வை குறும்படங்களாகவோ, பேசும் காணொளிகளாகவோ உருவாக்கி, பதிவு செய்த வீடியோவை சமூக வலைதள பக்கங்களில் பதிவிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி (@chennaicorp)ஐ குறிப்பிட்டு tag செய்து, Mention செய்யுங்கள். Instagramல் collab செய்யுங்கள்.

படைப்புகளின் கருத்து, படைப்பாற்றல், அதன் தெளிவு, செயல்திறன் ஆகியற்றைக் கொண்டு மதிப்பீடு செய்யப்படும். வெற்றியாளர்களுக்கு சிறப்பு அங்கீகாரம் வழங்கப்படும், மேலும் GCC ஐ tag செய்யும் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் இணைய வழி சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இந்த போட்டியின் மூலம் சென்னைவாசிகளின் பங்கேற்பை அதிகரித்து, சென்னையை அதிக வாக்குகளைப் பதிவு செய்த நகரமாக மாற்றுவதை நோக்கமாக கொண்டுள்ளது.

**Social Media Handles of Greater Chennai Corporation:**

**Twitter** : @chennaicorp

**Facebook** : /GreaterChennaiCorporation

**Instagram** : @chennaicorp

For clarifications you can email us commcellgcc@gmail.com

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**